# ???????????????????? 31 ?????? ???????
# ????????????????????
# ?????????????????????



ஜேர்மனியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 புகலிட கோரிக்கையாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) வலுக்கட்டாயமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குறித்த 31 புகலிட கோரிக்கையாளர்களும் Dusseldorf சர்வதேச விமான நிலையத்தினூடாக இலங்கைக்கு வலுக்கட்டாயமாக நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு நாடுகடத்தப்பட்டவர்கள் இன்று இலங்கை வந்தடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனிய அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 100 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து Dusseldorf விமான நிலையத்திற்கு முன்பாக தொடர்ச்சியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அந்த நாட்டின் இடதுசாரி கட்சிகள் மற்றும் ஏனைய போராட்ட அமைப்புகளைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு, புகலிடம் கோரியவர்களின் அகதி விண்ணப்பங்களின் மீள் பரிசீலனை அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்களில் நால்வர் இறுதி நேரத்தில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் சித்திரவதை செய்யப்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்த போதிலும்31 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ??????????? ????????????????
# ?????????????? ?????????? ??????? ?????????
# ?????????????????????



## ?????????? ????? ?????????

தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகளின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட எவரேனும் இலங்கையில் செயற்பட்டாலோ அல்லது இலங்கைக்கு வருகை தந்தாலோ அவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டுள்ளமை, இஸ்லாமிய பயங்கரவாத கொள்கையை பரப்புகின்றமை மற்றும் அவர்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுகின்றமைபோன்ற காரணங்களால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என அரசு தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக இலங்கை விவகாரங்களில் கண்காணித்து செயற்பட்டு வருகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் தனிப்பட்ட முஸ்லிம் மற்றும் தமிழ் உறுப்பினர்கள் உட்பட 400 இற்கும் அதிகமானவர்களின் பெயர்களையும் இலங்கை அரசு தடை செய்துள்ளது. இந்தத் தடைக்கான காரணம் குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில ஆகியோர் அரசின் நிலைப்பாட்டை மேற்கண்டவாறு ஊடகங்களுக்கு அறிவித்துள்ளனர்.

# ??????? ??? ?????? ???????????? ?????????????? ??????? ??????? ?????




சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுவரித் திணைகளத்தினரால் நேற்று மாலை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர்.

---

# ??????????? ??????? ??????? ??????????? ???????? ?????? ????? ?????




கிளிநொச்சி – வட்டக்கச்சி மாயவனூர் காட்டுப் பகுதியில் தமிழீழ விடுதலை புலிகளின் முகாம் அமைந்திருந்த பகுதியில் புதையல் தேடிய 5 பேர் இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்ட அன்பு முகாம் என்றழைக்கப்பட்ட பகுதியிலே புதையல் தோண்டும் பணி இடம்பெற்றுள்ளது. நேற்று நள்ளிரவு மாயனூர் காட்டுப் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்டபோதே இராணுவப் புலனாய்வாளர் மற்றும் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை, கொழும்பு மற்றும் கண்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த ஐவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்படும் ஸ்கேனிங் கருவி மற்றும் ஏனைய பொருட்கள் இவர்கள் பயணித்த மோட்டார் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

---

# ?????? ???????? ???????? ???????? ???????? ??????????????????!



பன்னிப்பிட்டி பகுதியில் லொறி சாரதியை தாக்கிய பொலிஸ் அதிகாரி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இன்று (செவ்வாய்க்கிழமை) நுகேகொடை நீதவான் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்திய நிலையில் அவரை எதிர்வரும் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இதேவேளை தாக்கப்பட்ட லொறி ஓட்டுநரின் சாரதி உரிமம் தற்காலிகமாக இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளது.

கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் லொறி சாரதியை தாக்கும் காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகி பரவிவந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# ???????? ?????? ???????????? ????????? ????????? ????????????







யேர்மனியில் ஈழத்தமிழ் ஏதிலிகளுக்கான நாடுகடத்தும் நடவடிக்கைக்கு எதிராக நேற்று ஏதிலிகளைச்

சிறைவைத்திருக்கும் யேர்மனி தென்மாநிலம்போட்சையும் நகரத்தில் உள்ள சிறைச்சாலைக்கு முன்பாக தமிழ்மக்களால் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல் நடைபெற்றது.

கொரோனா விதிமுறைகளைக் கடைப்பிடித்தபடி இருநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கோசங்களை எழுப்பி தங்கள் வலியினை வெளிப்படுத்தினர். தற்போதுள்ள நிலமையில் சிறிலங்காவை நம்பி எமது உறவுகளைக் கையளிக்கவேண்டாம் என்றும் சிறிலங்கா அரசு ஓர் பயங்கரவாத அரசு என்றும் சிறிலங்கா ஓர் சித்திரவதைக் கூடம் என்றும் 2009 வரை தமிழ் மக்களைச் சித்திரவதை செய்து கொண்றொளித்தவர் சகல அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதியாக இருக்கும் இக் கொலைக்களத்திற்கு எம் உறவுகளை அனுப்பவேண்டாம் என்று மிக உருக்கமாகக் கேட்டுக் கொண்டனர்.

இவ்வேளையில் உள்ளே நாடுகடத்துவதற்காகப் பிடிபட்டிருப்பவர்கள் இரும்புக்கம்பிகளுக்கூடாக தம் கைகளை அசைத்தும் குரல்களை எழுப்பியும் ஆர்ப்பாட்டம் செய்த உறவுகளுக்கு தமது சந்தோசத்தை வெளிப்படுத்தினர்.இதேவேளை இப்படி ஓர் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடல் யேர்மனி மத்தியமாநிலத்தில் படபோன் நகரில் Büren எனும் இடத்தில் அமைந்துள்ள சிறைச்சாலைக்கு முன்பாகவும் சமநேரத்தில் நடைபெறுகின்றது.அத்தோடு நாளை திங்கட்கிழமை பேர்லின் நகரத்தில் உள்ள உள்நாட்டு அமைச்சிற்கு முன்பாகவும் மத்தியமாநிலத்தில் உள்ள டுசில்டோர்ப் நாடாளுமன்றத்திற்கு முன்பாகவும் நடைபெறயிருப்பது குறிப்பிடத்தக்கது.




Stoppt die Massenabsch
tamilischer Geflüchteter in die Hände
Peiniger in Sri Lanka




## [illegible] 500 [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]!






வவுனியாவில் சுழற்சிமுறை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் இன்றுடன் ஆயிரத்து 500 நாட்களை எட்டியுள்ளது.

இதனை முன்னிட்டு குறித்த உறவுகளால் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கவனயீர்ப்புப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா கந்தசாமி ஆலயத்தில் விசேட வழிபாடுகள் இடம்பெற்று, பின்பு அங்கிருந்து பேரணியாக மணிக்கூட்டுச் சந்தியூடாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் கொட்டகையை வந்தடைந்தனர்.

இதன்போது, 'எங்கே எங்கே பிள்ளைகள் எங்கே', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்', 'ஓமந்தையில் கையளிக்கப்பட்ட பிள்ளைகள் எங்கே?' போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு சமூக இடைவெளிகளைப்

பேணி உறவுகள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானியாவின் கொடிகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.






# NAMATHU EELANADU E-PAPER -March 2021



நமது ஈழநாடு

www.namathueelanadu.com

குரல் 01 மலர் 09 மார்ச் 2021 மின்னஞ்சல்: contact@namathueelanadu.com இணையம்: www.namathueelanadu.com



Simply Scan the QR code Your Phone Camera

Download the NamathuEelanadu app




சிங்களப் பேரினவாதமானது தமிழினத்தின் தேசிய ஆன்மாவில் விழுத்திய ஆழமான வடுக்கள் ஒருபோதும் மாறப்போவதில்லை.

-தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

# இராணுவம் புதைத்ததை தொல்பொருளாய் தேடாதே!



# ??????????????????? ???? ?????????? ?????????????????? ??????




நீண்ட காலமாக ஜெர்மனியில் வசிக்கும் ஒரு தொகுதி ஈழத் தமிழர்கள் இம்மாதம் 30 ஆம் திகதி சிறப்பு விமானம் ஒன்றின் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப்படவுள்ளனர் என்ற அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

அதற்கு முன்னேற்பாடாக காவல்துறையால் பலர் கைது செய்யப்பட்டு பல இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ஜெர்மன் மனித உரிமைகள் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது. தொடர்ச்சியாக நடைபெறும் கைதுகளில் எங்கு கொண்டு செல்லப்படுகிறார்கள் என்கிற தகவலை உறவினர்கள் பெற முடியாத நிலை உள்ளது என்று அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை கூறுகிறது.

எந்த காரணங்களின் அடிப்படையில் அவர்கள் அவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்படுகின்றனர், எங்கு கொண்டு செல்லப்படுகின்றனர் என்கிற விவரங்கள் எல்லாமே இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் கைது செய்யப்பட்டவர்களில் 31 பேர் டுசல்டோர்ஃபிலும், 50 பேர் ஃபிராங்கஃபர்ட்டிலும் 11 பேர் ஸ்டுட்கார்ட்டிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அந்த மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கை கூறுகிறது.

கைது செய்யப்பட்டுள்ளவர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள முடியாத நிலையில், இந்த எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என்று அந்த அமைப்பு அஞ்சுகிறது. அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது அதை மேற்குலக நாடுகள் தீவிரமாக ஆதரித்தன. இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள். போர்க்காலத்தில் இடம்பெற்றவைகளுக்குப் பொறுப்பு கூறுதல். நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்றவை குறித்து அந்தத் தீர்மானம் பேசியது. ஆனால் அந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஜெர்மனி இப்படியான சுற்றி வளைப்பு. கைதுகள். நாடு கடத்தும் எண்ணங்கள் ஆகியவை அதன் இரட்டை நிலைப்பாட்டைக் காட்டுகின்றன என்று விமர்சகர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமைகள் விடயத்தில் மேற்குலக நாடுகளின் 'இரட்டை முகம்' இதன் மூலம் வெளியாகியுள்ளது என்று கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ஒரு புறம் இலங்கையில் மனித நிலைமைகள் மோசமாகவுள்ளன, பன்னாட்டு

விசாரணை தேவை, மத மற்றும் கலாச்சார உரிமைகள் நசுக்கப்படுகின்றன, நில அபகரிப்புகள் தொடருகின்றன என்றெல்லாம் சர்வதேச மட்டத்தில் மேற்குலக நாடுகள் ராஜபக்சக்கள் அரசுக்கு எதிராக குரல் கொடுக்கின்றன. ஆனால் நாட்டிலிருந்து பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக உயிருக்கு அஞ்சி பல நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள ஈழத் தமிழர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்புவது எனும் செயல்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்று புலம்பெயர் அமைப்புகள் கூறுகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் மிகவும் சர்ச்சைக்குரிய குடியேற்றம் தொடர்பான சட்டம் ஒன்றை ஜெர்மனிய அரசு கொண்டுவந்தது. அந்தச் சட்டம் ஜெர்மனியில் அகதித் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்டவர்களை நாடு கடத்த வழி செய்கிறது. அதுமட்டுமின்றி அந்தச் சட்டம் காவல்துறை மற்றும் குடிவரவு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குகிறது. கடந்த ஜனவரி 29ஆம் திகதி ஜெர்மன் அரசின் மனித உரிமைகள் கொள்கை மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான ஆணையர் பாபேல் காஃப்லர் அரசை தனது டிவிட்டரில் பாராட்டியிருந்தார். “ ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் -இலங்கையில் நிலவும் மனித உரிமைகள் சூழல் குறித்து பாரதூரமான கவலைகளை அளிக்கிறது -என்று கூறியுள்ளது.

இந்நிலையில் ஜெர்மனி தொடர்ந்தும் இணக்கப்பாடு பொறுப்பு கூறுதல் ஆகியவற்றுக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும். மேலும் ஐ நா மனித உரிமைகள் குழுவுக்கும் இது தொடர்பில் ஜெர்மனி ஆதரவளிக்கிறது என்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.” இப்படியான பின்புலத்தில் ஈழத் தமிழர்கள் சிலரை ஜெர்மனியிலிருந்து வெளியேற்றும் முடிவு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் அதிர்ச்சி மற்றும் மேற்குலக நாடுகள் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கையில் நிலவும் மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க பன்னாட்டு விசாரணையாளர்கள் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்று கூறிய ஜெர்மனி, அதேவேளை நூற்றுக்கும் அதிகமானவர்களை இலங்கைக்கு நாடுகடத்துகிறது. இது தான் ஜெர்மனியில் மனித உரிமைகள் தொடர்பிலான நிலைப்பாடா ? என்று அந்த அமைப்பு கேள்வி ஒன்றையும் முன்வைத்துள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள், அமைப்புகள் அல்லது பன்னாட்டு அமைப்புகள் இது தொடர்பகா ஒரு காணொளியையோ அல்லது எழுத்து மூலமான ஒரு அறிக்கையையோ தமது விரைவாக அனுப்புமாறு ஜெர்மன் மனித உரிமைகள் அமைப்பான ஐ எச் ஆர் ஏ கோரியுள்ளது.

ஜெர்மனியில் வாழும் ஈழத் தமிழர்கள் யாராவது காணாமல் போயிருந்தாலோ அல்லது கைது செய்யப்பட்டிருந்தாலோ உடனடியாக கீழ்க்கண்ட விலாசம், தொலைபேசி, தொலை நகல், மின்னஞ்சல் மூலம் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு The International Human Rights Association Bremen (IMRV) கேட்டுள்ளது.

**IMRV Bremen, Kornstr. 31 28201 Bremen, Germany. Fax: 0049 421 68 437 884, email: imrvbremen@gmail.com**

[illegible]





ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் உதவி ஆசிரியர் பொன்னாலையூர் பண்டிதர் தி.பொன்னம்பலவாணர் (வயது-77) இன்று உயிரிழந்தார். படையினரின் வாகனம் மோதியதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பயனின்றி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் உயிரிழந்தார்.

கடந்த 20 ஆம் திகதி மதியம் தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது யாழ். பன்றிக்கோட்டு பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் படையினரின் வாகனம் இவரை மோதியது. தலையில் காயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

'ஈழநாடு' பத்திரிகையின் தலைமை ஒப்புநோக்குநராக இருந்த இவர் பின்னர் உதவி ஆசிரியராக உயர்ந்தார். ஊடகத்துறையில் பணியாற்றிய காலத்தில் பல ஊடகவியலாளர்களை உருவாக்கினார். அவரிடம் பயிற்சி பெற்ற சிலர் இன்றும் ஊடகத்துறையின் சிரேஸ்ட ஊடகவியலாளர்களாக பணியாற்றுகின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளராகவும் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியின் விரிவுரையாளராகவும், வட்டுக்கோட்டை தொகுதி தமிழ்ச் சங்கத்தின் பல்வேறு பதவிநிலை செயற்பாட்டாளராகவும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பரீட்சை செயலாளராகவும், வெண்கரம் அமைப்பின் சிரேஷ்ட ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார்.

பொன்னாலை சித்திவிநாயகர் ஆலயத்தின் தலைமை அர்ச்சகராகவும் அக்கோயிலின் பரிபாலகராகவும் இறுதிவரை இருந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவத்தை ஆரம்பித்து வருடாந்தம் அதை நடத்திவந்தார்.தமிழ், சமஸ்கிருதம், சமயம், இலக்கியம் போன்ற பல்துறை விற்பன்னரான இவர் பல நூல்களையும் எழுதி வெளியிடுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

# ??????? ??????????????????? ??????????????
# ???????????????? ???????????



யாழ்ப்பாணம், வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட புத்தூர் பகுதியில் தொல்பொருள் திணைக்களத்தினரால் இன்றையதினம் முன்னெடுக்கப்பட்ட அகழ்வாராய்ச்சி பணி , மக்களின் எதிர்ப்பை அடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அகழ்வராய்ச்சி பணி இடம்பெறும்போதும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த அகழ்வாராட்சியானது நிறுத்தட்ட நிலையில் இன்றைய தினம் மீண்டும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதனால் குறித்த பகுதியில் அதிகளமான மக்கள் ஒன்றுகூடியதையடுத்து மக்களின் எதிர்ப்பின் பிரகாரம் அகழ்வு நடவடிக்கைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ??????????????? ????? ????????????????? ???

# ???????? ????? ????????? ??????????????? ?????????????!

சர்வதேச அளவிலான விதி மீறல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், தேசிய நீதிமன்றங்கள் ஊடாக சர்வதேச குற்றங்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதை உறுப்புநாடுகள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இது குறித்து இன்று (வியாழக்கிழமை) கருத்து வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி ஆகியவற்றைப் பெற உதவும் வெற்றியாகும் என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தீர்மானத்தைக் கொண்டுவருவதற்காக பிரசாரம்செய்த செயற்பாட்டாளர்களுக்கு எதிரான எந்தவொரு பழிவாங்கலும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என ஐ.நா. மற்றும் உறுப்பு நாடுகள் இலங்கை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு வலியுறுத்த வேண்டும் என அந்த கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் 46/1 தீர்மானம், இலங்கை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளைக் கண்காணித்து சர்வதேச குற்றங்களின் ஆதாரங்களைச் சேகரிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஒரு புதிய பொறுப்புக்கூறல் செயன்முறையை நிறுவுகிறது. இந்த தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது.

இதனையடுத்து, சமீபத்திய மாதங்களில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக ஏராளமான அச்சுறுத்தல்கள்

மற்றும் துன்புறுத்தல்கள் விடுக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந்தக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவும் பொறுப்புள்ளவர்களைக் கணக்கில்கொள்ளவும் பல ஆண்டுகளாகப் போராடி வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை தொடர்பான மனித உரிமைகள் பேரவையின் முக்கிய தீர்மானமானது, இலங்கையில் நீதி மறுக்கப்பட்டால், இதற்குப் பொறுப்புக்கூறலை ஏற்படுத்த ஐ.நா. முன்வரும் என்பதைக் காட்டுகிறது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனீவா இயக்குனர் ஜான் ஃபிஷர் கூறியுள்ளார்.

அதேநேரம், இலங்கையைப் போலவே பல அரசாங்கங்களும் தங்கள் சர்வதேச சட்டக் கடமைகளை மதிக்கத் தவறும்போது மனித உரிமைகள் பேரவை இது போன்ற கணிசமான நடவடிக்கைகளை முன்னெடுத்து பதிலளிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.